1987 மார்ச் 25]

வதற்கு தமிழக அரசும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும் தக்க நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன் மாதிரி தேவையில்லை. மருத்துவமனையை விரிவுப்படுத்த வேண்டும் என்று சொன்னால் போதும். அந்த இடம் பொதுப் பணித்துறையின் இடமாக இருந்தாலும், வருவாய்த்துறையின் இடமாக இருந்தாலும், வேறு எந்த ஒரு துறையின் இடமாக இருந்தாலும் தேவைப்பட்டால் அந்தத் துறை இணக்கம் தெரிவித்தால் எடுத்துக்கொள்வதில் தவறு எதுவும் இல்லை.

கடையநல்லூர் அரசு மருத்துவமனை

161—(* வினா எண் 9183)—**திரு. தெ. பெருமாள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் நகரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் படுக்கை வசதிகள் அதிகமாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தெ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அரசு மருத்துவமனையான இது குறைந்த படுக்கை வசதிகளைக் கொண்டதாக இருக்கிறது. இன்றையதினம் மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக ஏறத்தாழ 1 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை அங்கே இருப்பதால் அங்கே செல்லுகின்ற நோயாளிகள் அந்த ஆஸ்பத்திரியில் படுக்கை வசதி இல்லாமல் பாயிலும், தரையிலும் படுத்துக்கொண்டு சிகிச்சைப் பெற்று வருகிறார்கள்.

ஆகவே இந்த நிலையை மாற்ற இந்த ஆண்டிலாவது கூடுதல் படுக்கை வசதிகளை ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட படுக்கைகளின் எண்ணிக்கை 54. ஆனால் சராசரியாக தினம் அங்கே படுக்கைகளில் இருந்து சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 95 என்று புள்ளிவிவரம் தரப்பட்டிருக்கிறது. இந்த மருத்துவ மனையில் மட்டும் அல்ல, எல்லா மருத்துவ மனைகளி லும் இதே நிலைமை தான் இருக்கிறது. நிதி ஆதாரத்திற்கு ஏற்ப தான் படுக்கைகளின் எண்ணிக்கையை நாம் விரிவு ஆக்க முடியும். ஆனால் இது போன்ற அவசரமான நேரங்களில் சில சமயங்களில் பாய் போட்டு மருத்துவம் செய்ய வேண்டிய அவசியம் கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது.

திருப்பத்தூர் அரசு பொது மருத்துவமனையை விரிவுபடுத்தல்

162—(*வினா எண் 9822)—**திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் அரசு பொது மருத்துவ மனையை விரிவு படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூரில் உள்ள மருத்துவமனை தாலுக்கா தலைமை மருத்துவ மனையாக இருக்கிறது. மிகப் பழமையான மருத்துவமனையாக இருக்கிறது. அங்கு நாள்தோறும் ஏறக் குறைய 2 ஆயிரம் புறநோயாளிகளுக்கும் அதிகமாக நோயாளிகள்